3rd May 1957] [Sri A. V. P. Asaithambi]

அங்கத்தினர்கள், பீர்மேடு, தேவிகுளம் பகுதிகளை தமிழ் நாட்டுடன் சேர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்பொழுதுதான் மகிழ்ச்சி ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு வாழ்க திராவிடம் என்று முடித்துக் கொள்கிறேன்.

* **Sri V. ARUNACHALA THEVAR** : கனம் சபாநாயகர் அவர்களே, நமது மாகாண கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையிலிருந்து சில முக்கியமான விஷயங்களை நான் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தவிர நமது அங்கத்தினர் ஸ்ரீ ராமசாமி அவர்கள் இன்று கன்னியா குமரி சென்னை ராஜ்யத்துடன் சேர்ந்த பிறகு கடுமையான வரிகள் அதாவது இன்கம் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ், செஸ் முதலிய வரிகள் விதித்திருக்கிறார்கள், அம்மாதிரியான வரிகள் விதிப்பது கூடாது, இதற்குமுன் அங்குள்ள மக்களுக்கு ஒரு காசுகூட வரி இல்லை என்று அவர் குறிப்பிட்டார்கள்.

Sri T. S. RAMASWAMY PILLAI : On a point of order, Sir, I never said so.

* **Sri V. ARUNACHALA THEVAR** : நமது புதுக்கோட்டை சென்னை ராஜ்யத்துடன் இணைத்த பிறகு சேல்ஸ் டாக்ஸ், இன்கம்-டாக்ஸ், செஸ் முதலிய வரிகளை போடுகிறார்கள். இந்த அரசாங்கம் ஏராளமான வரிகளை போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் சென்னை ராஜ்யத்துடன் இணைக்கப்படாத போது, நல்ல பாதைகள் கிடையாது, தார்போட்ட ரோடுகள் கிடையாது ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பது கிடையாது. கிணறு வெட்டுவதற்கு மான்யம் கொடுப்பது கிடையாது. ஆனால் இப்பொழுது வரிகள் விதித்த போதிலும், மேற்சொன்ன சலுகைகளெல்லாம் கொடுக்கப் படுகின்றன. தனி ராஜ்யமாகவும் சின்ன சமஸ்தானங்களாகவும் இருக்கும் போது எந்தவித சீர்திருத்தமும் செய்வது முடியாத காரியம்.

கடந்த வருஷத்தில் புயலின் காரணமாக அரசாங்கம் ஏராளமான பணத்தை செலவழித்தது. கனம் முதல் மந்திரி அவர்கள் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், முதலிய இடங்களுக்கு ஓடோடியும் வந்து நிவாரண வேலைகளை நேரில் கவனித்தார்கள். புதுக்கோட்டைக்கும் விஜயம் செய்தார்கள். தலைக்கு ரூ. 30 வீதம் இடிந்த வீடுகளை பழுது பார்ப்பதற்கு உதவி செய்தார்கள். இருந்தபோதிலும், வறுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் வீடு கட்டமுடியாமல் கஷ்டப்பட்டுகொண்டிருக்கிறார்கள். வரண்ட பிரதேசம் அல்லது வானம் பார்த்த பிரதேசங்களில் அம்மாதிரி நிலைமை இருந்துவருகிறது. அரசாங்கம் நல்ல முறையில்தான் உதவி அளித்தார்கள். இருந்தபோதிலும், ஜனங்களுடைய கஷ்டத்தை அவ்வளவாக நிவர்த்திக்க முடியவில்லை. புயலால் பாதிக்கப்பட்ட பல வீடுகள் இன்னும் சீர்படுத்தப்படவில்லை என்பதைப்பற்றியும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். சர்க்கார் 1950-ல். . . . 5 p.m.

Mr. SPEAKER : As it is now already past five, the hon. Member will resume his speech to-morrow.

The House will now adjourn and meet again at 11 a.m. to-morrow.

The House then adjourned (5-02 p.m.)

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

49. *Notification issued with G.O. Ms. No. 360, Agriculture (Food Production), dated 30th August 1956, amending clause 3 (d) of the Madras Land Utilization Order, 1955.*

50. *Governor's Address (circulated to all the Members of the Legislature on 1st May 1957).*